
# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 01-31, 2024



| வ. எண். | தலைப்புகள் | புக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநில நிகழ்வுகள் | 7 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 8 |
| 4 | திட்டங்கள் | 16 |
| 5 | சர்வதேச நிகழ்வுகள் | 20 |
| 6 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 22 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 23 |
| 8 | பாதுகாப்பு | 28 |
| 9 | பொருளாதாரம் | 33 |
| 10 | நியமனங்கள் | 35 |
| 11 | விருதுகள் | 38 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 43 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 44 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 45 |
| 16 | விளையாட்டு | 51 |
| 17 | நினைவில் நின்றவர்கள் | 54 |
| 18 | அறிக்கைகள் | 55 |
| 19 | தரவரிசைப்பட்டியல் | 57 |
| 20 | முக்கிய தினங்கள் | 58 |

# தமிழ்நாடு

## ➢ TN-Alert, ஒரு கைப்பேசி செயலி




- ✓ தீவிர வானிலை சூழ்நிலைகளில் உதவுவதற்காக பல்வேறு பங்குதாரர்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக. TN-Alert என்ற ஒரு கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தியதை திரு. மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.
- ✓ வானிலை மற்றும் மழைப்பொழிவு குறித்த தகவல்களை மக்களுக்கு நிகழ்நேரத்தில் தமிழில் வழங்குவதற்காக. தமிழ்நாடு அரசு ‘டிஎன் அலெர்ட்’ என்ற ஒரு கைப்பேசி செயலியை உருவாக்கியுள்ளது. தகுந்த முனனெச்சரிக்கை நடவடிக்கைகளைத் திட்டமிட இது அவர்களுக்கு உதவும்.
- ✓ வானிலை முன்னறிவிப்பு, மழையளவு மற்றும் அணைகளில் சேமிப்பு ஆகிய தகவல்களை இந்தக் கைப்பேசி செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## ➢ தமிழ்நாடு தொழிற்சாலை வேலைவாய்ப்பில் முதலிடத்தில் உள்ளது

- ✓ ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் திங்கட்கிழமை அன்று வெளியிட்ட தொழில்துறை வருடாந்திர கணக்கெடுப்பு (Annual Survey of Industries) 2023-23 முடிவுகளின்படி, தமிழ்நாடு உற்பத்தித் துறையில் அதிக எண்ணிக்கையிலான நபர்களை வேலையில் அமர்த்தியுள்ளது.



- ✓ தொழில்துறை ஆண்டு சர்வேயின்படி, 1,84,94,962 பேர் தொழிற்சாலைகளில் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 15 விழுக்காட்டினர் தமிழ்நாட்டினர் ஆவர்.
- ✓ மொத்தமுள்ள 2,53,334 யூனிட்களில் 15.66 விழுக்காடு என்ற கணக்கில் அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ✓ உற்பத்தித் துறையில் அதிக எண்ணிக்கையிலான மக்களைப் பயன்படுத்தும் முதல் மூன்று மாநிலங்கள் தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகும்.

## ➢ முதியோரை அவர்களின் வீட்டிலேயே பராமரிப்பதற்காக ஆதரவு உதவியாளர் (Home Based Elderly Care Support Assistant)

- ✓ சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, "வீட்டு அடிப்படையிலான முதியோர் பராமரிப்பு உதவியாளர்" என்ற மூன்று மாத சான்றிதழ் படிப்பை தமிழக அரசு செவ்வாய் கிழமை தொடங்கியது.




- ✓ மாநிலத்தில் உள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் இந்தப் பாடத்திட்டத்தில் மொத்தம் 975 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.

## ➢ தமிழ்நாடு அரசு பன்றி வளர்ப்புக் கொள்கையை (Pig Breeding Policy) வெளியிட்டது

- ✓ ஊட்டச் சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாநிலத்தில் பன்றி வளர்ப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பன்றி வளர்ப்புக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.



- ✓ பன்றி இறைச்சித் தொழிற்சாலையை நிறுவுதல், அதிக விவசாயிகளின் இலாபத்திற்காக பன்றி இறைச்சி பொருட்களின் மதிப்பு கூட்டுதலை ஊக்குவித்தல், கூட்டுறவு சந்தை அப்படையிலான சந்தை சங்கிலியை உருவாக்குதல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பன்றிகளுக்கு தனிமைப்படுத்துதல் வசதிகளை செயல்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாடுகள் இந்தக் கொள்கையில் இடம்பெற்றுள்ளன.
- ✓ மேலும் பன்றி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக, மானியங்கள், வரி விடுமுறைகள் மற்றும் நிதி உதவியையும் மாநில அரசு வழங்கும்.

## ➢ வனவிலங்கு தடயவியல் துறையில் “அரசு அறிவியல் நிபுணர்“ (Govt. Scientific Expert) என்ற அடையாளத்தைப் பெற்ற முதல் நிறுவனம்

- ✓ தமிழ்நாடு வனத்துறையால் நிறுவப்பட்ட வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு நிறுவனம் (Advanced Institute of Wildlife Conservation) தென்னிந்தியாவிலேயே அரசு அறிவியல் நிபுணராக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முதல் நிறுவனம் ஆகும்.




- ✓ இந்த அடையாளத்துடன், இந்த நிறுவனம் தமிழ்நாடு வனத்துறைக்கு ஆதரவளிக்கவும், அண்டை மாநிலங்களின் வனம் மற்றும் வனவிலங்குத் துறைகளுக்கு தடயவியல் ஆய்வுக்கு உதவவும் முடியும். இதன்மூலம் இப்பகுதியில் வனவிலங்கு சட்ட அமலாக்கம் மேம்படுத்தப்படுகிறது.

## ➢ தமிழ்நாடு, அடுத்த ஆறு ஆண்டுகளில் 30 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனைச் சேர்க்கும்

- ✓ அடுத்த ஆறு ஆண்டுகளில் 30 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை தமிழ்நாடு சேமிக்கும் என்று தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழக லிமிடெட் நிர்வாக இயக்குநர் அனீஷ் சேகர் தெரிவித்தார்.




- ✓ மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 24 ஜிகாவாட் ஆகும்.
- ✓ 2030க்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து வரும் ஆற்றல் நுகர்வு இலக்கு 50 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ✓ தமிழ்நாடு 10.5 ஜிகாவாட் காற்றலை நிறுவும் திறனைக் கொண்டு, காற்றாலை ஆற்றலில் முன்னோடியாகத் திகழ்கிறது.
- ✓ மாநிலத்தின் ஆற்றல் மாற்றத்தில் காற்றாலை ஆற்றல் பெரும் பங்கு வகிக்கும்.

➢ **இளஞ்சிவப்பு ஆட்டோ ரிக்ஷாக்கள் (Pink Autorickshaws)**

- ✓ பேண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்காக சென்னையில் பெண்களால் இயக்கப்படும் ‘இளஞ்சிவப்பு ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு’ மாநில அரசு பகுதியளவு நிதியளிக்கும்.



- ✓ சேன்னையில் வசிக்கும் 250 பெண்களுக்கு சிஎன்ஜி-ஹைப்ரிட் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்குவதற்கு தலா ரூ.1 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கும்.
- ✓ 25-45 வயதுடைய பெண்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ✓ விண்ணப்பதாரர்கள் சென்னையில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். எஸ்எஸ்எல்சி தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

# மாநில நிகழ்வுகள்

➢ **நித்தி ஆயோக்கின் பெண்கள் தொழில் முனைவோர் தள அத்தியாயம் (NITI Aayog's Women Entrepreneurship Platform Chapter)**

✓ நித்தி ஆயோக் மகளிர் தொழில்முனைவோர் தள அத்தியாயத்தைப் பெற்ற முதல் மாநிலமாக தெலுங்கானா ஆனது.




✓ நித்தி ஆயோக் அமைப்பு, வி ஹப் (WE Hub) மற்றும் தெலுங்கானா அரசுடன் இணைந்து பெண்கள் தொழில்முனைவோர் தள முதல் மாநில அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியது.

✓ இந்தத் தளமானது பல்வேறு துறைகளில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவித்து ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பெண்கள் தொழில் முனைவோர் தள மையமானது (WEP), மாநிலத்தில் உள்ள அனைத்து பெண்கள் தொழில்முனைவோர் தள நடவடிக்கைகளுக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக இருக்கும்.

➢ **பீகாரின் இரண்டாவது புலிகள் காப்பகமாக கைமூர் அங்கீகரிக்கப்பட்டது**




✓ பீகாரில் உள்ள கைமூர் மாவட்டத்தில் இரண்டாவது புலிகள் காப்பத்தை அமைப்பதற்கு ஒன்றிய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.


✓ இந்த முடிவானது, கைமூர் வனவிலங்கு சரணாலயத்தை, புலிகள் காப்பகமாக மேம்படுத்துவதற்கு பீகார் அரசு எடுத்த முன்மொழிவைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

✓ இதுவரை பீகாரின் மேற்கு சம்பாரனில் உள்ள வால்மீகி புலிகள் காப்பகமே, அந்த மாநிலத்தில் இதுவரை இருந்த ஒரே புலிகள் காப்பகமாக விளங்கியுள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

- **சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு இந்தியா குரூஸ் பாரத் இயக்கத்தைத் (Cruise Bharat Mission) தொடங்குகிறது.**

✓ குரூஸ் பாரத் இயக்கம் என்பது இந்தியாவில் கப்பல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட புதிய திட்டமாகும்.




✓ ஒன்றிய அமைச்சர் ஸ்ரீசர்பானந்தா சோனோவால், மும்பை துறைமுகத்தில் 'எம்பிரஸ்' என்ற பயணக் கப்பலை அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார்.

✓ இந்த இயக்கமானது, ஒரு முக்கிய பயண இடமாக இந்தியாவின் திறனைப் பயன்படுத்துவதையும், பயணக் கப்பல்களில் பயணிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 2029ஆம் ஆண்டுக்குள் கப்பல் பயணிகள் போக்குவரத்தை இரட்டிப்பாக்குவதே இதன் இலக்கு ஆகும்.

- **தூய்மை இந்தியா திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது**




✓ தூய்மையான இந்தியா என்பது 'மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த ஆண்டான 2019ல் அவருக்கு இந்தியா செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்' என்று புது தில்லியில் ராஜ்பாத்தில் தூய்மை இந்தியா இயக்கத்தைத் தொடங்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

✓ 2 அக்டோபர் 2014 அன்று, தூய்மை இந்தியா இயக்கம் ஒரு தேசிய இயக்கமாக நாடு முழுவதும் தொடங்கப்பட்டது.

➢ **எண்ணெய் வித்து உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தேசிய இயக்கத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**




✓ பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவை, உள்நாட்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் சமையல் எண்ணெய்களில் தன்னிறைவை அடைவதை (Atmanirbhar Bharat) இலக்காகக் கொண்ட மைல்கல் முயற்சியான சமையல் எண்ணெய்கள் - எண்ணெய் வித்துகள் மீதான தேசிய இயக்கத்திற்கு (National Mission on Edible Oils – Oilseeds) ஒப்புதல் அளித்துள்ளது.

➢ **பழங்குடியின கிராமங்களுக்கான நலத் திட்டத்தை பரதமர் தொடங்கி வைத்தார்.**

✓ 550 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் அதிகம் வசிக்கும் கிராமங்களில் அடிப்படைத் திட்ட செறிவூட்டலுக்கான தொகுப்பான தர்தி ஆபா ஜன்ஜாதியா கிராம் உட்கர்ஷ் அபியான் (Dharti Aaba Janjatiya Gram Utkarsh Abhiyan) திட்டத்தை ஜார்கண்டின் ஹசாரிபாக் மாவட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி புதன்கிழமை அன்று தொடங்கி வைத்தார்.




✓ முதலில் பிரதமரின் ஜன்ஜாதியா உன்னத் கிராம் அபியான் (PM Janjatiya Unnat Gram Abhiyan) என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இந்தத் தொகுப்பானது, பழங்குடியினர் பெரும்பான்மையாக உள்ள 63,000 கிராமங்களில் ஏற்கனவே உள்ள திட்டங்களைச்

செயல்படுத்துவதற்கான ஒரு குடைத் தொகுப்பாக கடந்த மாதம் ஒன்றிய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

- **மராத்தி, மேலும் நான்கு மொழிகள் செம்மொழி அந்தஸ்தைப் பெறுகின்றன**

✓ மராத்தி, பெங்காலி, அசாமி, பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்தை வழங்க ஒன்றிய அமைச்சரவை வியாழக்கிழமை அன்று ஒப்புதல் அளித்தது




✓ மராத்தி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை 2013-ஆம் ஆண்டு முதல் இருந்து வந்த நிலையில், மகாராஷ்டிராவில் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✓ மேற்கு வங்காளத்தின் மிகப்பெரிய திருவிழாவான துர்கா பூஜைக்கு மத்தியில் வங்காள மொழிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

✓ இந்தியாவில் இதுவரை ஆறு செம்மொழிகள் உள்ளன – தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் மற்றும் ஒடியா. 2004ல் செம்மொழி அந்தஸ்து பெற்ற முதல் மொழியாக தமிழ் உள்ளது. அதைத் தொடர்ந்து இந்த அந்தஸ்தை 2005ல் சமஸ்கிருதம் பெற்றது.

- **வேளாண் துறையின் அனைத்து முயற்சிகளும் 2 புதிய திட்டங்களின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன**

✓ வேளாண் துறையில் உள்ள அனைத்து மத்திய திட்டங்களையும் பிரதமரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (Krishonnati Yojana) மற்றும் கிரிஷோன்னதி யோஜனா (Pradhan Mantri Rashtriya Krishi Vikas Yojana) ஆகிய இரண்டு புதிய திட்டங்களாக இணைக்க ஒன்றிய அமைச்சரவை வியாழக்கிழமை முடிவு செய்தது.



- ✓ ரூ.57,074.72 கோடி ஒதுக்கீட்டைக் கொண்ட பிரதமரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா, நிலையான விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கிரிஷோன்னதி யோஜனா திட்டமானது, 44,246.89 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய தன்னிறைவு ஆகியவற்றைக் குறிக்கும்.
- ✓ இரண்டு திட்டங்களுமே மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தப்படும்.

## ➢ NCERT அமேசானுடன் இணைந்துள்ளது

- ✓ நாடு முழுவதும் பாடப்புத்தகங்கள் கிடைக்கப்பெறுவதை மேம்படுத்துவதற்காக NCERT அமைப்பு அமேசானுடன் இணைந்துள்ளது.




- ✓ தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கவுன்சில் (National Council for Educational Research and Training - NCERT) அசல் என்சிஇஆர்டி பாடப்புத்தகங்களை அச்சிடப்பட்ட விலையில் வழங்குவதற்காக அமேசான் செல்லன் சர்வீசஸ் பிரைவேட் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- ✓ இந்தப் புத்தகங்கள் நாடு முழுவதும் கிடைக்கும் என்று கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தார்.

## ➢ இலவச செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தைத் தொடர்வதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது

- ✓ ஜூலை 2024 முதல் டிசம்பர் 2028 வரை பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் இலவச செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குவதைத் தொடர்வதற்கு ஒன்றிய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
- ✓ அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இலக்கு பொது விநியோக அமைப்பு, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவை மற்றும் பிரதமரின் போஷான் போன்ற திட்டங்களின்கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி இலவசமாக வழங்கப்படும்.

**➢ ஒன்றிய அரசு சுகாதாரம், வேளாண்மை மற்றும் நகரங்கள் ஆகிய மூன்று அம்சங்களின்கீழ் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையங்களை அமைக்கிறது**

- ✓ சுகாதாரம், வேளாண்மை மற்றும் நிலையான நகரங்களில் செயற்கை நுண்ணறிவில் மூன்று சிறப்பு மையங்களை அமைப்பதாக ஒன்றிய அரசு செவ்வாய்க்கிழமை அறிவித்தது




- ✓ உயர் சிறப்பு மையத்தை (CoE) டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (All India Institute of Medical Sciences - AIIMS) மற்றும் இந்திய தொழில் நுட்பக் கழகம் வழிநடத்தும். அதே சமயம் வேளாண்மையை பஞ்சாபின் ரோபரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் வழிநடத்தும்.
- ✓ நிலையான நகரங்களில் உயர் சிறப்பு மையங்களை உருவாக்கும் பொறுப்பு கான்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த உயர் சிறப்பு மையங்கள் தொழில்துறை மற்றும் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

**➢ நீதி இனி கண்ணை மூடிக் கொண்டு இருக்காது: உச்ச நீதி மன்றம் புதிய குறியீட்டை ஏற்றுக் கொண்டது**

- ✓ இந்திய உச்ச நீதி மன்றம் 'நீதி தேவதை" சிலையின் மறுவடிவமைப்பு பதிப்பை வெளியிட்டது. இது காலனித்துவ காலத்திலிருந்து ஒரு புதிய மாற்றத்தைக் குறிக்கிறது.



- ✓ முன்னதாக, ஒரு கண் மூடியும் வாளுடனும் சித்தரிக்கப்பட்டிருந்தது. இந்தப் புதிய நீதி தேவதை சிலையானது தற்போது திறந்த கண்களுடன் வாளுக்குப் பதிலாக இந்திய அரசியலமைப்பைக் கொண்டுள்ளது. இது 'அனைவரையும் சமமாகப் பார்க்கும்' அரசியலமைப்பு மதிப்புகள் மற்றும் நீதிக்கான நீதித்துறையின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

**➢ விண்வெளி நிறுவனங்களுக்கு ரூ.1000 கோடி துணிகர முதலீட்டை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

- ✓ விண்வெளி தொழில்நுட்ப களத்தில் உள்ள நிறுவனங்களை ஆதரிப்பதற்காக 1000 கோடி துணிகர மூலதன நிதிக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்று ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வியாழக்கிழமை அன்று அறிவித்தார்.




- ✓ இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையத்தின்கீழ் இந்த நிதி வழங்கப்பட உள்ளது.
- ✓ இந்த நிதியை ஐந்து ஆண்டு காலத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 2025-26 நிதியாண்டில் 150 கோடி, அடுத்த மூன்றாண்டுகளில் தலா 250 கோடி, 2029-30ல் 300 கோடி என்று வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**➢ பழங்கால கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கும் பணியை மீண்டும் தொடங்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது**


- ✓ ஒன்றிய கலாச்சார அமைச்சகம் கையெழுத்துப் பிரதிகளுக்கான தேசிய இயக்கத்தை (National Mission for Manuscripts) 'புத்துயிர் மற்றும் மறுதொடக்கம்' செய்ய உள்ளது. இந்தியாவில் பண்டைய நூல்களைப் பாதுகாக்க உதவும் ஒரு தன்னாட்சி அமைப்பை உருவாக்குவது குறித்தும் ஆலோசித்து வருகிறது.



- ✓ தற்போது, கையெழுத்துப் பிரதிகளுக்கான தேசிய இயக்கம், இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் ஒரு பகுதியாக உள்ளது. புதிய அமைப்புக்கு தேசிய கையெழுத்துப் பிரதிகள் ஆணையம் என்று பெயரிடப்படலாம் என்று தெரிகிறது. இது ஒன்றிய அமைச்சகத்தின்கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக இருக்கும் என்று தி இந்துவிடம் தெரிவிக்கப்பட்டது.

## ➢ ஒன்றிய அரசு முத்ரா யோஜனா திட்டத்தின்கீழ் கடன் வரம்பை 20 இலட்சம் என்று இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது

- ✓ நாட்டில் தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக, பிரதமரின் முத்ரா யோஜனா (Pradhan Mantri Mudra Yojana) திட்டத்தின்கீழ் கடன் வரம்பை இரண்டு மடங்காக உயர்த்தி 20 இலட்சமாக ஒன்றிய அரசு ஆக்கியுள்ளது.




- ✓ நிதியில்லாதவர்களுக்கு நிதியளிக்கும் முத்ரா திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தை மேலும் விரிவுபடுத்த இந்த உயர்வு விரும்புகிறது என்று நிதி அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- ✓ தருண் பிரிவின்கீழ் முந்தைய கடனைப் பெற்று வெற்றிகரமாகத் திருப்பிச் செலுத்திய தொழில் முனைவோருக்கு, முத்ரா கடன்களின் வரமபு தற்போதைய 10 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக உயர்த்தப்படும்.

## ➢ இந்தியாவின் முதல் எழுத்தாளர் கிராமம் டேராடூனில் திறக்கப்பட்டது

- ✓ இந்தியாவின் முதல் எழுத்தாளர் கிராமத்தை, துணை நிலை ஆளுநர் குர்மீத் சிங் (ஓய்வு) மற்றும் முதல்வர் புஷ்கர் சிங் தாமி ஆகியோருடன் இணைந்து முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், திறந்து வைத்தார்.



- ✓ இந்த தனித்துவமான கிராமம் படைப்பாற்றலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. .இது நாடு முழுவதும் உள்ள எழுத்தாளர்களுக்கு ஒரு வளர்ப்பு சூழலை வழங்குகிறது. மேலும், டேராடூனை இலக்கிய திறமைகளுக்கான புதிய கலாச்சார மையமாக நிறுவுகிறது.

APOLLO STUDY CENTRE

# திட்டங்கள்

➢ **நிலையான விவசாயத்திற்காக PM-RKVY மற்றும் Krishonnati Yojana**

✓ ஒன்றிய அமைச்சரவை, பல்வேறு மத்திய நிதியுதவி திட்டங்களை, பிரதமரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா மற்றும் கிருஷோன்னதி யோஜனா ஆகிய இரண்டு முக்கிய குடை திட்டங்களாக ஒருங்கிணைக்கும் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் திட்டத்திற்கு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.




✓ இந்த மூலோபாய நடவடிக்கையானது பிஎம்-ஆர்கேவிஒய் மூலம் நிலையான விவசாயத்தை மேம்படுத்துவதையும், கேஒய் வழியாக உணவுப் பாதுகாப்பு மற்றும் வேளாண் தன்னிறைவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ மோத்தம் 1,01,321.61 கோடி செலவிலான இந்தத் திட்டங்கள் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு, தற்போதுள்ள முன்முயற்சிகளின் தொடர்ச்சி மற்றும் திறம்பட செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

➢ **ஹம்ஃபர் கொள்கை**

✓ ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி, ஹம்ஃபர் கொள்கையை தொடங்கி வைத்தார்.




✓ தேசிய நெடுஞ்சாலைப் பயணத்தை மேம்படுத்துவதற்காகவும், வழித்தட வசதிகளை அதிகரிப்பதற்காகவும் இந்தக் கொள்கை தொடங்கப்பட்டுள்ளது.

✓ தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வசதியை இந்தக் கொள்கை மேம்படுத்தும்.

✓ இது வழித்தட வசதிகளின் வளர்ச்சியை துரிதப்படுத்தும்.

✓ துரப்படுத்தப்பட்ட சுத்தமான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட வசதிகள் கிடைப்பதன்மூலம் பயணிகள் 'ஹம்ஃபர் கொள்கை'மூலம் பயனடைவார்கள்.

➢ **பிரதமரின் இன்டர்ன்ஷிப் திட்டத்தைக் கற்றுக் கொள்வது முதல் வழிநடத்துவது வரை**

✓ பிரதமரின் இன்டர்ன்ஷிப் திட்டம் அக்டோபர் 3, 2024 அன்று தொடங்கப்பட்டது.




✓ ஆன்லைன் போர்ட்டல் மூலம் செயல்படுத்தப்படும் இந்த இலட்சிய முயற்சியானது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடி இளைஞர்களுக்கு மதிப்புமிக்க இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அவர்கள் பல்வேறு வணிகச் சூல்களில் தங்களை ஈடுபடுத்தி பல்வேறு தொழில்களை ஆராயவும் அனுமதிக்கிறது.

➢ **"SAMARTH" (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டிற்கான திட்டம்)**

✓ 'சமர்த்த' திட்டம் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டிற்கான திட்டம்) மார்ச் 2026 வரை ஒன்றிய அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது.




✓ சமர்த் (SAMARTH) என்பது ஜவுளி அமைச்சகத்தின் தேவை சார்ந்த மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த மக்கள் திறன் திட்டமாகும்.

✓ 3 லட்சம் பேருக்கு ஜவுளி தொடர்பான திறன்களைப் பயிற்றுவிப்பதற்காக 495 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இந்த சமர்த் திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு (2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டு) நீட்டிக்கப்பட்டுள்ளது.

✓ இந்தத் திட்டத்தின் நோக்கம், ஒழுங்கமைக்கப்பட்ட ஜவுளி மற்றும் தொடர்புடைய துறைகளில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் தொழில்துறையை ஊக்குவிப்பதும் ஆதரிப்பதும் ஆகும்.

## ➢ **துடிப்பான இந்தியாவுக்கான பிரதமரின் இளம் சாதனையாளர் உதவித் தொகை விருது திட்டம் (PM Young Achievers Scholarship Award Scheme for Vibrant India - PM-YASASVI)**

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், துடிப்பான இந்தியாவுக்கான பிரதமரின் இளம் சாதனையாளர் உதவித் தொகை விருது திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.





✓ PM-YASASVI திட்டம் என்பது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் அறிவிக்கப்பட்ட பழங்குடியின சமூகம் (Denotified Tribes) ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான குடைத் திட்டமாகும்.

✓ இந்தத் திட்டமானது சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய மாணவர்களின் கல்வித் தேவைகளை ஆதரிப்பதில் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் தாக்கமான அணுகுமுறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ **ஆயுஷ்மான் வயா வந்தனா அட்டை (Ayushman Vaya Vandana Card)**

✓ ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின்கீழ், ஆயுஷ்மான் வய வந்தனா அட்டையை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தியுள்ளார்.





✓ இது வருமானம் அல்லது பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆண்டுதோறும் 5 இலட்சம் வரையிலான சுகாதாரப் பாதுகாப்புக்கான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பலன்களை விரிவுபடுத்துகிறது.

✓ முதியோர்கள் அதிக மருத்துவச் செலவுகள் குறித்த கவலையுடன் இனி வாழத் தேவையில்லை என்பதை இந்த அட்டை உறுதி செய்கிறது.

- **தோந்தரவு .இல்லாத பிறப்பு மற்றும் இறப்பு பதிவுக்கான கைப்பேசி செயலி தொடங்கப்பட்டது**

- ✓ ஆக்டோபர் 29, 2024 அன்று, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா சிவில் பதிவு அமைப்பு மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினார். இது நிர்வாகத்தில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுகளை எளிதாக்குகிறது.



- ✓ இந்த முன் முயற்சியானது ஒன்றிய அரசின் டிஜிட்டல் இந்தியா பார்வையுடன் ஒத்துப் போகிறது. குடிமக்களுக்கு எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் தங்கள் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழியிலும் முக்கியமான நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்கு தடையற்ற மற்றும் திறமையான வழியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

APOLLO STUDY CENTRE

# சர்வதேச நிகழ்வுகள்

- **இந்தியாவும் ஜெர்மனியும் தொழிலாளர் இடப்பெயர்வு மற்றும் திறன் அங்கீகாரம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளன**

✓ தோழிலாளர்களின் இடம்பெயர்வை எளிதாக்குவதற்காக இந்தியாவும் ஜெர்மனியும், தொழிலாளர் இடப்பெயர்வு மற்றும் திறன் அங்கீகாரம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளன.



✓ இந்த ஒப்பந்தத்தின்கீழ் திறமையான வல்லுநர்களை ஜெர்மனி தொழிற்சாலைகள் பணியமர்த்திக் கொள்ளும்.

✓ இது ஜி20 ‘திறன் அடிப்படையிலான இடம்பெயர்வு பாதைகள்’ கட்டமைப்பின்கீழ் முதல் ஒப்பந்தமாக இருக்கும்.

✓ திறமையான இந்திய தொழில் வல்லுநர்கள் ஜெர்மனிக்கு இடம்பெயர்வதற்கான வழியையும் இது திறக்கும்.

✓ இந்த ஒப்பந்தம் 2024 இறுதிக்குள் டிஜிட்டல் விசாவை அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தும்.

- **கஜான் பிரகடனம் (Kazan Declaration)**

✓ 16வது பிரிக்ஸ் உச்சி மாநாடு கசான் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதுடன் நிறைவடைந்தது.




✓ இது ஒத்துழைப்பின் முக்கிய பகுதிகள் மற்றும் உலகளாவிய பிரச்சினைகளில் குழுவின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டைக் கோடிட்டுக் காட்டும் ஒரு விரிவான ஆவணமாகும்.

- ✓ இந்தப் பிரகடனத்தின் கருப்பொருள் ‘உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான பலதரப்பு வாதத்தை வலுப்படுத்துதல்’ என்பதாகும்.
- ✓ இராஜதந்திரத்தின்மூலம் அமைதியான தீர்வுக்கான அவசியத்தை இந்தப் பிரகடனம் வலியுறுத்துகிறது.
- ✓ உலகளாவிய முடிவெடுப்பதில் ஜி20இன் முக்கியத்துவத்தை இந்த உச்சி மாநாடு அடிக்கோடிட்டுக் காட்டியது.

APOLLO STUDY CENTRE

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **நான்கு வருட பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியா – சீனா எல்லை ஒப்பந்தம் கையெழுத்தானது**

✓ நான்கு வருட பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியாவும் சீனாவும் எல்லை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.




✓ இந்த ஒப்பந்தமானது கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் படைகளை விலக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துகிறது.

✓ இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, ரோந்து ஏற்பாடுகளில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்புமுனையை அறிவித்தார். இது ராணுவ நிலைப்பாட்டின் முடிவைக் குறிக்கிறது.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **உலகப் பசுமைப் பொருளாதார மன்றம் (World Green Economy Forum) 2024**

✓ துபாயில் நடைபெற்ற உலக பசுமைப் பொருளாதார மன்றம் 2024, ‘உலகளாவிய நடவடிக்கைக்கு அதிகாரமளித்தல்: வாய்ப்புகளைத் திறத்தல் மற்றும் முன்னேற்றம்’ என்ற கருப்பொருளின்கீழ் அழுத்தமான சுற்றுச் சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, உலகளாவிய தலைவர்களை ஒன்றிணைத்தது.




✓ இந்த உச்சி மாநாடு ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில், அக்டோபர் 2 மற்றும் 3, 2024இல் நடைபெற்றது.

✓ இந்த மாநாட்டின் மையக் கருத்து: ‘உலகளாவிய செயல்களை மேம்படுத்துதல்: வாயப்புகளைத் திறத்தல் மற்றும் முன்னேற்றம்’ என்பதாகும். இதன் நோக்கம் ஆற்றல், ஆக்சிஜனிறக்கம், காலநிலை நிதி மற்றும் பலவற்றில் உலகளாவிய ஒத்துழைப்பு, புதுமை மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதாகும்.

✓ நிகர – பூஜ்ஜிய எதிர்காலத்தை நோக்கி நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதே இந்த மன்றத்தின் குறிக்கோள் ஆகும்..

➢ **ஹாம்பர்க் நிலைத் தன்மை மாநாடு**

✓ ஒன்றிய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி 3 நாள் பயணமாக ஜெர்மனி சென்றுள்ளார்.




✓ தனது பயணத்தின்போது, அமைச்சர் இரண்டு நாள் ஹம்பர்க் நிலைத்தன்மை மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.
✓ நிலையான வளர்ச்சி, பசுமை ஹைட்ரஜன், குறைந்த விலை நிதியளிப்பு மற்றும் முழுமையான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மதிப்பு சங்கிலி ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக ஜெர்மனி, இங்கிலாந்து மற்றம் பிற மூத்த அதிகாரிகளுடன் அவர் தொடர்ச்சியான இருதரப்பு சந்திப்புகளை நடத்துவார்.

➢ **இந்தியா டிஜிட்டல் வேளாண்மை மாநாடு 2024**
✓ இந்தியா டிஜிட்டல் வேளாண் மாநாடு 2024 புது தில்லியில் நடைபெற்றது. இந்திய உணவு மற்றும் வேளாண்மைச் சபை மற்றும் ஐஐடி ரோபார் டிஜஎப் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தன.




✓ இந்தியாவில் விவசாயம் செய்யும் முறையை டிஜிட்டல் தொழில்நுட்பம் எவ்வாறு மாற்றுகிறது என்பதை ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்வானது, விவசாயிகளுக்கு அவர்களின் வேலையை மேம்படுத்த புதிய கருவிகளை வழங்குகிறது.
✓ வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் செயலாளர் டாக்டர் தேவேஷ் சதுர்வேதி, டிஜிட்டல் வேளாண்மை இயக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.
✓ இந்தத் திட்டமானது தொழில்நுட்பம் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி வேளாண்மையை நவீனமயமாக்குவதுதான்.

➢ **19வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு**
✓ 11 அக்டோபர் 2024 அன்று, லாவோ பிடிஆரின் வியன்டியானில் நடைபெற்ற 19வது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொண்டார்.




- ✓ இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களை உள்ளடக்கிய பரந்த பகுதியான இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் மற்ற நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை அவர் கலந்து கொண்டது எடுத்துக்காட்டுகிறது.
- ✓ இந்தோ – பசிபிக்கின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆசியான் (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு) முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை பிரதமர் வலியுறுத்தினார்.

➢ **ஆசியான் உச்சி மாநாடு: பிராந்திய உறவுகள் மற்றும் இணைப்பை மேம்படுத்துதல்**

- ✓ சமீபத்தில் முடிவடைந்த 44வது மற்றும் 45வது ஆசியான் உச்சி மாநாடுகள், லாவோஸ், வியன்டியானில் (அக்டோபர் 8-11) ஆசியான் நாடுகளின் தலைவர்கள் மற்றும் கூட்டாளர்களை ஒருங்கிணைத்து, முக்கியமான பொருள்களில் பின்னடைவு மற்றும் இணைப்பை வலியுறுத்தியது.




- ✓ இந்த மாநாட்டில் ஏறக்குறைய 90 ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஆசியானின் பங்களிப்பை வலுப்படுத்துதல், விநியோகச் சங்கிலி இணைப்பு, நிலையான விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றில் இந்த உச்சி மாநாடு கவனம் செலுத்தியது.

➢ **சர்வதேச மெத்தனால் கருத்தரங்கை நித்தி ஆயோக் நடத்துகிறது**

- ✓ நித்தி ஆயோக் நடத்தும் இரண்டாவது சர்வதேச மெத்தனால் கருத்தரங்கு மற்றும் எக்ஸ்போ 2024, அக்டோபர் 17-18, 2024 அன்று புதுதில்லியில் உள்ள மானெக்ஷா மையத்தில் நடைபெற்றது.




- ✓ இந்த நிகழ்வு இந்தியாவின் மெத்தனால் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது 2016ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மெத்தனால் நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- ✓ இந்தக் கருத்தரங்கானது, குறைந்த கார்பன் எரிபொருளாக மெத்தனாலின் பங்கு மற்றும் உலகளாவிய ஆற்றல் மாற்றத்தில் அதன் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டு, பசுமை கப்பல் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும்.


➢ **பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாடு**

- ✓ பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார் என்று வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை அன்று அறிவித்தது.




- ✓ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முறைசாரா நாடுகளின் உச்சி மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்று வருகிறது.
- ✓ 'பிரிக்ஸ் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தனது சகாக்கள் மற்றும் அழைக்கப்பட்ட தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை பிரதமர் நடத்துவார்' என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **2024 பிரிக்ஸ் உச்சி மாநாடு: ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய மைல்கற்கள்**



- 2024 பிரிக்ஸ் உச்சி மாநாடு, ரஷ்யாவின் கசானில், அக்டோபர் 22-26 வரை நடைபெற்றது. 2023 உச்சி மாநாட்டில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த மாநாடு இந்தக் குழுவிற்கு ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிப்பதாக அமைந்தது.
- மாற்று உலகளாவிய கட்டண முறைகள், பணமதிப்பு நீக்கம் மற்றும் மேம்பட்ட ஒத்துழைப்பு பற்றிய முக்கிய விவாதங்களுடன் 'நியாயமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான பன்முகத் தன்மையை வலுப்படுத்துதல்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு நடைபெற்றது.

- **ஆசியா தூய்மை எரிசக்தி உச்சி மாநாடு (Asia Clean Energy Summit) 2024**




- ஆசியா தூய்மை ஆற்றல் உச்சி மாநாடு (The Asia Clean Energy Summit) ஆண்டுதோறும் நடைபெறும் சிங்கப்பூரின் சர்வதேச எரிசக்தி வாரத்தின் மூலக்கல்லாகும். இதன் 11வது பதிப்பு அக்டோபர் 22-24, 2024 வரை சிங்கப்பூரில் நடைபெறுகிறது.
- இந்த முதன்மை மாநாடு மற்றும் கண்காட்சியானது ஆசியாவில் சுத்தமான எரிசக்தி தீர்வுகளை முன்னெடுப்பதற்கான நிபுணர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கிறது.

# பாதுகாப்பு

➢ **காஜிண்ட் (KAZIND) 2024 பயிற்சி**

✓ 8வது இந்தியா – கஜகஸ்தான் கூட்டு இராணுவப் பயிற்சி காஜிண்ட் 2024 உத்தரகாண்ட் மாநிலம் அவலியில் உள்ள சூர்யா வெளிநாட்டுப் பயிற்சி முனையில் தொடங்கியது.




✓ ஆண்டுதோறும் நடைபெறும் இந்தப் பயிற்சி அக்டோபர் 13 அன்று முடிவடைந்தது.

✓ கூட்டு இராணுவத் திறனை மேம்படுத்துவதற்கும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை துணை வழக்கமான சூழ்நிலையில் மேற்கொள்வதற்கும் தயார்செய்வதற்காக இந்தப் பயிற்சி நடைபெற்றது.

➢ **DefConnect 4.0.**

✓ பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் DefConnect 4.0 ஐத் தொடங்கி வைத்தார்.

✓ பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின்கீழ், பாதுகாப்பு சீர்மைக்கான புதுமை – பாதுகாப்பு கண்டுபிடிப்பு அமைப்பு (Innovations for Defence Excellence – Defence Innovation Organisation), டெல்லி கண்டோன்மென்டில் உள்ள மானெக்சா மையத்தில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

✓ இது கொள்கை வகுப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், ஆயதப்படைகள் மற்றும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களை ஒன்றிணைத்து உள்நாட்டு கண்டுபிடிப்புகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி விவாதிக்கும்.

➢ **மலபார் பயிற்சி 2024**



- ✓ மலபார் பயிற்சி ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் அக்டோபர் 8 அன்று தொடங்கியது.
- ✓ இந்தப் பயிற்சி இந்தியாவால் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு பயிற்சியில் ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கும். இந்தப் பயிற்சியானது, விசாகப்பட்டினத்தில் துறைமுகக் கட்டம் தொடங்கி கடல் கட்டடம் வரை நடைபெறும். இந்தப் பயிற்சி அக்டோபர் 8 முதல் அக்டோபர் 18 வரை நடத்தப்பட்டது.

## ➢ T-90 பீஷ்மா பீரங்கி

- ✓ இந்திய இராணுவம் தனது முதல் மாற்றியமைக்கப்பட்ட டி-90 பீஷ்மா பீரங்கியை உருவாக்கியுள்ளது.



- ✓ இது அதன் சுடும் வேகம் மற்றும் பாதுகாப்பிற்காக அறியப்படுகிறது.
- ✓ இந்த மறுசீரமைப்பு செயல்முறையானது நாட்டில் உருவாக்கப்பட்ட உள்நாட்டு பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப திறன்களை வெளிப்படுத்துகிறது.
- ✓ இந்த டி-90 பீஷ்மர் 9.6 மீட்டர் நீளமும், 2.8 மீட்டர் அகலமும், தோராயமாக 47 டன் எடையும் கொண்டது.

## ➢ இப்சமர் (IBSAMAR) கடல்சார் பயிற்சி




- ✓ ஆக்டோபர் 06 முதல் 18, 2024 வரை திட்டமிடப்பட்ட இந்திய பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளின் கூட்டு பன்னாட்டு கடல்சார் பயிற்சியான இப்சமரின் எட்டாவது பதிப்பில பங்கேற்க இந்திய கடற்படையின் முன்னணி நீர்மூழ்கி போர்க்கப்பலான

ஐஎன்எஸ் நல்வார், தென்னாப்பிரிக்காவின் சைமன்ஸ் நகருக்கு 06 அக்டோபர் 2024 அன்று வந்தடைந்தது.

- ✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்தப் பயிற்சியானது, பங்குபெறும் மூன்று நாடுகளுக்கு இடையே தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் பின்பற்றுகிறது. தென்னாப்பிரிக்கா அதன் மூலோபாய புவியியல் இருப்பிடத்தின் காரணமாக நிரந்தரப் புரவலராக செயல்படுகிறது.

## ➢ **‘நசீம் அல்பஹுர்’ (Naseem Al Bahr) கடற்படைப் பயிற்சி**




- ✓ கோவா கடற்கரையில் அக்டோபர் 13 முதல் 18, 2024 வரை நடைபெற்ற இந்தியா – ஓமன் இருதரப்பு கடற்படைப் பயிற்சியான நசீம்-அல்-பஹீர், ஓமன் நாட்டுக் கப்பலுடன் இணைந்து இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் திரிகண்ட் மற்றும் டோர்னியர் கடல்சார் ரோந்து விமானங்கள் பங்கேற்றன. ஆல் சீப் பயிற்சியானது இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது.
- ✓ இந்தப் பயிற்சியானது இரண்டு முக்கிய கட்டங்களை உள்ளடக்கியது. அவை துறைமுகக் கட்டம் மற்றும் கடல் கட்டம்.

## ➢ **ஸ்வவ்லம்பன் சக்தி (Swavlamban Shakti) பயிற்சி**

- ✓ ராணுவத்தின் சுதர்சன் சக்ரா கார்ப்ஸ் ஆப் சதர்ன் கமாண்ட், ஜான்சிக்கு அருகிலுள்ள பாபினா ∴பீல்ட் ∴பயர் ரேஞ்சில் ‘ஸ்வவ்லம்பன் சக்தி’ என்ற பயிற்சியை நடத்தியது.



- ✓ இந்தப் பயிற்சியானது அக்டோபர் 17 ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 22ஆம் தேதி வரை நடைபெற்றது. XXI கார்ப்ஸ் அல்லது சுதர்சன் சக்ரா கார்ப்ஸ் அதன் தலைமையகத்தை போபாலில் கொண்டுள்ளது.
- ✓ இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கம், முக்கிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு மூலம் போர்த் திறன்களை மேம்படுத்துவதாகும்.

➢ **இந்தியாவின் நான்காவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் கடலுக்குள் அனுப்பப்பட்டது**

- ✓ இந்தியாவின் நான்காவது அணுசக்தியால் இயங்கும் பாலிஸ்டிக் ஏவகணை நீர்மூழ்கிக் கப்பல் (nuclear-powered ballistic missile submarine - SSBN), S4*, என்று அழைக்கப்படுகிறது. இது விசாகப்பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இருந்து கடலில் செலுத்தப்பட்டது.




- ✓ இந்த நீர்மூழ்கிக் கப்பலானது முதல் ஐஎன்எஸ் அரிஹந்த் (எஸ்2) ஐ விட பெரியது மற்றும் அதிக திறன் கொண்டது. இது அடிப்படையில் மேம்பட்ட தொழில்நுட்பக் கப்பல் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகும்.
- ✓ இந்தியாவில் தற்போது இரண்டு SSBN கள் செயல்படுகின்றன.

➢ **கடல்சார் கூட்டாண்மை பயிற்சி (Maritime Partnership Exercise)**

- ✓ இந்தியக் கடற்படையும் ஜெர்மன் கடற்படையும் சமீபத்தில் இந்தியப் பெருங்கடலில் தங்கள் தொடக்க கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை நிறைவு செய்தன. இது கடற்படை ஒத்துழைப்பில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.




- ✓ இந்தப் பயிற்சியானது வங்கக் கடலில் நடைபெற்றது.

- ✓ இந்த நிகழ்வானது கடல்சார் தொடர்பு மற்றும் பிராந்திர நிலைத் தன்மையை மேம்படுத்துவதில் இரு நாடுகளின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

- ➢ **சிம்பெக்ஸ் (SIMBEX) 2024**
- ✓ சிங்கப்பூர் இந்தியா கடல்சார் இருதரப்புப் பயிற்சியின் (Singapore India Maritime Bilateral Exercise) 31வது பதிப்பு, விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்குக் கடற்படைக் கட்டளையில் அக்டோபர் 23 முதல் 29, 2024 வரை நடைபெற்றது.




- ✓ ஆண்டுதோறும் நடைபெறும் இந்தப் பயிற்சியானது, இந்திய கடற்படைக்கும் சிங்கப்பூர் கடற்படைக்கும் இடையே வளர்ந்து வரும் கடல்சார் ஒத்துழைப்பைக் காட்டுகிறது. இது மூலோபாயக் கூட்டாண்மை மற்றும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் இயங்குதன்மை ஆகியவற்றின் இணைந்த நோக்கங்களை மேம்படுத்துகிறது.

APPOLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **ஜவுளித்துறை 2030ஆம் ஆண்டுக்குள் கிட்டத்தட்ட 350 பில்லியன் டாலர்களாக வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

✓ ஆகஸ்ட் 2024க்கான வர்த்தக தரவுகளின்படி, இந்தத் துறையில் ஆயத்த ஆடைகளில் ஆண்டுக்கு ஆண்டு 11 விழுக்காடு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.




✓ அடுத்த 3-5 ஆண்டுகளில் பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் (PM Mega Integrated Textile Region) மற்றும் அப்பேரல் (பிரதமரின் மித்ரா) பூங்கா மற்றும் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை (Production Linked Incentive) திட்டங்களின் மூலம் 90 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ நாடு முழவதும் ஏழு பிஎம் மித்ரா பூங்காக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பூங்காவும் ரூ.10,000 கோடி முதலீட்டை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ இதன்மூலம் 1 இலட்சம் நேரடி வேலைவாய்ப்பும், 2 இலட்சம் மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

- **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2025ஆம் நிதியாண்டில் 7-7.2 விழுக்காடு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது**

✓ சமீபத்திய மந்தநிலை காரணமாக 25 நிதியாண்டின் முதல் காலாண்டில், ஜிடிபி ஆண்டுக்கு ஆண்டு 6.7 விழுக்காடு மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளபோதிலும், 2024-25 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 7.0 முதல் 7.2 விழுக்காடு வரை வளர்ச்சியடையும் என்று டிலாயட்டி இண்டியா (Deloitte India) இன் சமீபத்திய எகனாமிக் அவுட்லுக் கணித்துள்ளது. ,




- ✓ இந்த வளர்ச்சியானது, வலுவான உற்பத்தி நடவடிக்கை, நிலையான எண்ணெய் விலைகள் மற்றும் அமெரிக்க நாணயக் கொள்கையின் எதிர்பார்க்கப்படும் தளர்வு உள்ளிட்ட சாதகமான உள்நாட்டு நிலைமைகளால் உந்தப்படுகிறது. இதுமூலதன வரவுகளை அதிகரிக்கும்.

# நியமனம்

➢ **அறுவை சிகிச்சை நிபுணராகிய வைஸ் அட்மிரல் ஆர்த்தி சரண் - ஆயுதப்படை மருத்துவ சேவைகளின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதல் பெண் ஆவார்.**

✓ ஆயுதப் படை மருத்துவ சேவைகளின் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்ற முதல் பெண் அதிகாரி என்ற பெருமையை அறுவை சிகிச்சை நிபுணரான வைஸ் அட்மிரல் ஆர்த்தி சரின் செவ்வாய்க்கிழமை பெற்றுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



✓ ஆயுதப் படைகள் தொடர்பான ஒட்டுமொத்த மருத்துவக் கொள்கை விஷயங்களுக்கும் ஆயுதப் படைகள் மருத்துவ சேவைகள் தலைமை இயக்குநரே நேரடியாக பாதுகாப்பு அமைச்சகத்திற்குப் பொறுப்பாவார்.

➢ **டாடா அறக்கட்டளையின் தலைவராக நோயல் டாடா நியமிக்கப்பட்டுள்ளார்**

✓ டாடா குழுமத்தின் பரோபகாரப் பிரிவான டாடா அறக்கட்டளையின் தலைவராக நோயல் டாடா ஒரு மனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.




✓ ரத்தன் டாடா தனது 86வது வயதில் காலமானதைத் தொடர்ந்து நடந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

✓ நோயல் டாடா, ரத்தன் டாடாவின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். ஆவர் டாடா ஸ்டீல் மற்றும் வோல்டாஸ் உட்பட பல பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் வாரியங்களில் பணியாற்றுகிறார்.

➢ **ஓமர் அப்துல்லா ஜம்மு காஷ்மீரின் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்**

✓ ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் முதல் முதலமைச்சராக தேசிய மாநாட்டுக் கட்சியின் உமர் அப்துல்லா பதவியேற்றார்.




✓ ஜம்மு பகுதியிலிருந்து தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பில் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட திரு. சுரீந்தர் குமார் சவுத்ரி துணை முதல்வராகப் பதவியேற்றார்.

✓ 2018ஆம் ஆண்டு பிடிபி-பாஜக கூட்டணி ஆட்சி கவிழ்ந்ததில் இருந்து ஜம்மு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது.

✓ குடியரசுத் தலைவர் ஆட்சி 6 ஆண்டுகளுக்குப் பிறகு 13 அக்டோபர் 2024 அன்று குடியரசுத் தலைவரால் ரத்து செய்யப்பட்டது.

➢ **இந்தியாவின் 51வது தலைமை நீதிபதியாக நீதியரசர் சஞ்சீவ் கண்ணா நியமனம்**

✓ நீதித்துறை அமைப்பின் ஒரு முக்கிய புதுப்பிப்பில், நீதியரசர் சஞ்சீவ் கண்ணா இந்தியாவின் 51வது தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பதவியேற்பு விழா நவம்பர் 11, 2024 அன்று நடைபெறுகிறது.




✓ அவரது நியமனம் இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட்டின் பரிந்துரையை ஏற்று, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவால் உறுதிப்படுத்தப்பட்டது.

✓ நீதிபதி கண்ணா 2025 மே 13 அன்று ஓய்வு பெறும் வரை தலைமை நீதிபதியாகப் பணியாற்றுவார். அவர் ஏறத்தாழ 183 நாட்கள் பதவியில் இருப்பார்.

➢ **ஒன்பதாவது மகளிர் ஆணையத் தலைவியாக விஜய கிஷோர் ரஹத்கார் பொறுப்பேற்றார்**

✓ தேசிய மகளிர் ஆணையத்தின் புதிய தலைவராக விஜய கிஷோர் ரஹத்கார் செவ்வாய்க்கிழமை அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.




- ✓ ரேகா ஷர்மாவிற்குப் பிறகு பொறுப்பேற்கும் அவர், தேசிய மகளிர் ஆணையத்தின் ஒன்பதாவது தலைவராகப் பொறுப்பேற்றார்.
- ✓ திருமதி ரஹத்கர், மகாராஷ்டிர மாநில மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் பாஜக மகிளா மோர்ச்சாவின் தேசியத் தலைவர் ஆவார்.

# விருதுகள்

➢ **தாதாசாகேப் பால்கே விருது**

✓ மூத்த நடிகர் மிதுன் சக்ரவர்த்தி 2022ஆம் ஆண்டிற்கான சினிமா துறையில் அரசின் மிக உயர்ந்த அங்கீகாரமான தாதாசாகேப் பால்கே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டதாக திங்களன்று அறிவிக்கப்பட்டார்.




✓ இந்த விருது அக்டோபர் 8 ஆம் தேதி 70வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் வழங்கப்படும்.

➢ **ஆம்ப்ரோஸ் மற்றும் கேரி ரூவ்குன் 2024ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்றனர்**

✓ விஞ்ஞானிகள் விக்டர் அம்ப்ரோஸ் மற்றும் கோரி ரூவ்குன் ஆகியோர் மைக்ரோ ஆர்என்ஏ-வைக் கண்டுபிடித்ததற்காகவும், டிரான்ஸ்கிரிப்ஷனுக்குப் பிந்தைய மரபணு ஒழுங்குமறையில் அதன் பங்களிப்பிற்காகவும், 2024ஆம் ஆண்டு உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.




✓ மரபணு செயல்பாட்டை ஒழுங்குபடுத்துவதில் மைக்ரோ ஆர்என்ஏ முக்கிய பங்கு வகிக்கிறது.

- ✓ நமது உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களும் ஒரே மரபணுவைக் கொண்டிருக்கின்றன. ஆனால் செல்கள் வெவ்வேறு செயல்பாடுகளைச் செய்கின்றன.
- ✓ இந்த நோபல் பரிசுக்கான வெற்றியாளர்களை ஸ்வீடனின் கரோலின்ஸ்கா இன்ஸ்டிடியூட் மருத்துவ பல்கலைக் கழகத்தின் நோபல் அசெம்பிளி தேர்வு செய்துள்ளது.

## ➢ கலைச்செம்மல் விருதுகள்

- ✓ 2024ஆம் ஆண்டின் கலைச்செம்மல் விருதுகள் தமிழ்நாட்டில் ஓவியம் மற்றும் சிற்பம் ஆகிய துறைகளில் ஆறு கலைஞர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கின்றன:




- ✓ மணிவேலு. புாரம்பரிய கலை
- ✓ எல். பாலச்சந்திரன், பாலம்பரிய சிற்பம்
- ✓ கே. கன்னியப்பன், பாரம்பரிய சிற்பம்
- ✓ கே. முரளிதரன், நவீன கலை
- ✓ ஏ. செல்வராஜ், நவீன கலை
- ✓ ஆர். ராகவன் நவீன சிற்பம்
- ✓ பாரம்பரிய மற்றும் சமகால நுண்கலைகளில் கலைஞர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் தமிழக அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையால் ஆண்டுதோறும் கலைச் செம்மல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## ➢ இயறபியலுக்கான நோபல்பரிசு


- ✓ 2024ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜான் ஹாப்ஃபீல்ட் மற்றும் ஜெஃப்ரி ஹிண்டன் ஆகியோருக்கு 'செயற்கை நரம்பியல் நெட்வொர்க்குகள் மூலம் இயந்திரக் கற்றலை செயல்படுத்தும் அடிப்படைக் கண்டுபிடிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக' வழங்கப்பட்டுள்ளது என்று ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்ஸ் செவ்வாயன்று அறிவித்தது.




- ✓ ஆராய்ச்சியின் பல பகுதிகள், தரவுகளைச் செயலாக்குவதற்காக இயந்திரக் கற்றல் மாதிரிகள் மற்றும் செயற்கை நடுநிலை நெட்வொர்க்குகளை (artificial neural networks) பயன்படுத்தினாலும், சாட்ஜிபிடி (ChatGPT) உள்ளிட்ட அரட்டை செயற்கை நுண்ணறிவு செயலிகளின் வெளிப்பாடு காரணமாக இந்தச் சொற்கள் எல்லாம் வீட்டிற்குள்ளும் வந்துவிட்டன.


➢ **வேதியியலுக்கான நோபல் பரிசு**

- ✓ 2024ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு கணக்கீட்டு புரத வடிவமைப்பில் புதுமையான கண்டுபிடிப்புக்காக டேவிட் பேக்கருக்கும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புரதக் கட்டமைப்புக் கணிப்புக்காக டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் எம். ஜம்பர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.




- ✓ ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்சால் அங்கீகரிக்கப்பட்ட இந்த கண்டுபிடிப்புகள், புரதங்களைப் புரிந்து கொள்வதிலும் வடிவமைப்பதிலும் முக்கிய முன்னேற்றங்களைக் குறிக்கின்றன.

## ➢ 2024ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசை ஹான் காங் வென்றார்




- ✓ 2024ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு தென் கொரிய எழுத்தாளரான ஹான் காங்கிற்கு, அவரது வலிமையான எழுத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இது வரலாற்று அதிர்வுகளைப் பிரதிபலிக்கிறது மற்றும் மனித இருப்பின் பலவீனமான தன்மையை எடுத்துக் காட்டுகிறது.
- ✓ இந்த அறிவிப்பு அக்டோபர் 10, 2024 அன்று வெளியிடப்பட்டது. மேலும் இந்தப் பரிசில், 11 மில்லியன் ஸ்வீடிஷ் குரோனார் (சுமார் 1.1 பமில்லியன் டாலர்) ரொக்கப் பரிசும் அடங்கும்.

## ➢ சுர்வதேச விண்வெளி கூட்டமைப்பு (IAF World Space) விருது

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகிய டாக்டர். எஸ். சோமநாத், மதிப்புமிக்க சர்வதேச விண்வெளி கூட்டமைப்பின் உலக விண்வெளி விருதைப் பெற்றுள்ளார்.




- ✓ சுந்திரனின் தென் துரவத்தில் மென்மையாகத் தரையிறங்கி சரித்திரம் படைத்த இந்தியாவின் சந்திரப் பயணமான சந்திரயான் 3 இன் குறிப்பிடத்தக்க வெற்றியை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

## ➢ ஹாரி மெஸ்ஸல் விருது

- ✓ பிபாப் குமார் தாலுக்தார் 'தி ஹாரி மெசல் விருதை'ப பெற்றார். ஆஸ்ஸாமைச் சேர்ந்த பிபாப் குமார் தாலுக்தார் 'இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் (International Union for Conservation of Nature) சிற்றினங்கள் உயிர்வாழ்தல்

ஆணையத்தின் (Species Survival Commission) பாதுகாப்புத் தலைமைக்காக அவர் ஹாரி மெஸ்ஸல் விருதைப் பெற்றுள்ளார்.




- ✓ அபுதாபியில் நடைபெற்ற 5வது ஐயுசிஎன் எஸ்எஸ்சி தலைவர்கள் கூட்டத்தின்போது அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ✓ சிற்றினங்கள் பாதுகாப்பில் குறிப்பாக எஸ்எஸ்சியில் அவரது தலைமைமூலம் ஆற்றப்பட்ட பணிக்காக தாலுக்தாருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

APOLLO STUDY CENTRE

# புகழ்பெற்ற நபர்கள்

- **ஃபமெினா மிஸ் இந்தியா 2024 Femina Miss India 2024**

✓ மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த நிகிதா போர்வால், பெமினா மிஸ் இந்தியா 2024 என்ற பட்டத்தை வென்றுளளார்.




✓ இந்த வெற்றிக்குப் பிறகு, நிகிதா உலக அழகிப் போட்டியில் (73வது உலக அழகிப் போட்டி) இந்தியாவின் சார்பில் கலந்து கொள்வார்.


✓ ஃபெமினா மிஸ் இந்தியா 2024 போட்டிகள் அக்டோபர் 16 அன்று மும்பையில் நடைபெற்றன.

✓ நிதிதா போர்வால் உஜ்ஜயினியில் பிறந்து வளர்ந்தவர். இவர் 60 நாடகங்களில் நடித்துள்ளார்.

✓ ஃபெமினா மிஸ் இந்தியா 2024 என்பது ஃபெமினா மிஸ் இந்தியா போட்டியின் 60வது பதிப்பாகும்.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

➢ **உலகின் மலைப் பகுதி பாலூட்டிகள் (Mountain Mammals of the World)**





- ✓ இந்தியாவில் உள்ள சில பாதுகாவலர்களே எம்,கே. ரஞ்சித் சிங் போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் மரபுகளுக்கு உரிமை கொண்டாட முடியும். பென்குயின் ரேண்டம் ஹவுஸால் வெளியிடப்பட்ட அவரது புதிய புத்தகமாகிய, உலகின் மலைப்பகுதி பாலூட்டிகள், அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதில் அவரது வாழ்நாள் அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாக விளங்குகிறது.
- ✓ குஜராத்தின் வான்கனேரின் அரசு குடும்பத்தின் உறுப்பினராக உள்ள ரஞ்சித்சிங், இந்தியாவின் வனவிலங்கு பாதுகாப்புக் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

APOLLO STUDY CENTRE

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

➢ **தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பட்டாம்பூச்சி இடம்பெயர்வு பெருமளவு காணப்பட்டது**

✓ தமிழ்நாட்டில் சமீபத்தில் டானைனே (Danainae) துணைக் குடும்பத்திலிருந்து, குறிப்பாக 'புலிகள் மற்றும் காகங்கள்' என்று அழைக்கப்படும் வண்ணத்துப்பூச்சிகள் பெருமளவில் இடம்பெயர்ந்தன.



✓ இந்த வண்ணத்துப் பூச்சிகள் கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து (இந்தியாவில் உள்ள ஒரு மலைத்தொடர்) மேற்குத் தொடர்ச்சி மலையை நோக்கி நகர்ந்தன. 2023ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட அதிக இடம்பெயர்வு இருந்தது.

✓ இயற்கை மற்றும் வண்ணத்துப்பூச்சி சங்கம் (Danainae) இந்த பட்டாம்பூச்சிகளின் இடம்பெயர்வை 2013ஆம் ஆண்டு முதல் கண்காணித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் ஏராளமான பட்டாம்பூச்சிகள் வெளிவருவதை அவர்கள் பார்க்கிறார்கள்.

➢ **பாரத்ஜென் (BharatGen)**

✓ பல்வேறு மொழிகளில் ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (generative AI) கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு பாரத்ஜென் என்ற முயற்சியை இந்தியா தொடங்கியுள்ளது.




✓ இதுவே இந்த மாதிரியான முதல் மாநில திட்டம் என்று அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

- ✓ இந்த முயற்சியை இண்டர்டிசிப்ளினரி சைபர் - பிசிகல் சிஸ்டம்ஸ் பற்றிய தேசிய இயக்கம் (National Mission on Interdisciplinary Cyber-Physical Systems) என்ற திட்டத்தின்கீழ், ஐஐடி பாம்பே நிர்வகிக்கிறது. இது ஜெனரேடிவ் ஏஐ அமைப்புகளை உருவாக்கும்.

- ➢ **இறால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக சிபா (CIBA), ஒரு புதிய அமைப்பை உருவாக்குகிறது**




- ✓ ஊற்பத்திச் செலவு மற்றும் காலநிலை மாற்றங்கள் இறால் வளர்ப்பின் உற்பத்தி மற்றும் இலாபத்தைப் பாதிக்கும் நேரத்தில், நகரத்தை அடிப்படையாகக் கொண்ட மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (Central Institute of Brackishwater Aquaculture - CIBA) ஒரு ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு மூன்று பயிர் சுழற்சிகளில் (ஒரு சுழற்சி என்பது 100 நாட்கள் ஆகும்) 100 முதல் 120 டன்கள் இறால் உற்பத்தி செய்யக் கூடிய புதிய கால உற்பத்தி முறையை உருவாக்கியுள்ளது.

- ➢ **பிஎஸ்எல்வி சி37இன் மேல் பகுதி பூமிக்குத் திரும்புகிறது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது**
- ✓ துருவ செயற்கைக்கோள் ஏவகணை (PSLV) சி-37இன் மேல்பகுதியானது ஞாயிற்றுக்கிழமை அன்று பூமியின் வளி மண்டலத்தில் மீண்டும் நுழைந்ததாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



- ✓ பிஎஸ்எல்வி-சி37 மிஷன் பிப்ரவரி 15, 2017 அன்று ஏவப்பட்டது. இதில் கார்டோசாட்-2டி முக்கிய பேலோடாக இருந்தது. ஆத்துடன் 103 செயற்கைக் கோள்கள் இணை பயணிகளாக இருந்தன.
- ✓ இந்த நிகழ்வு மூலம் ஒரே செலுத்து வாகனம் மூலம் 104 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்திய முதல் பணியாக விண்வெளி நிறுவனம் வரலாற்று சாதனையைப் படைத்தது.

**➢ இந்தியா ட்ரக்கோமாவை ஒழித்து விட்டது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது**

- ✓ ஒரு பொது சுகாதார பிரச்சினையாக இருந்து வந்த, கண்களைப் பாதிக்கும் பாக்டீரியா தொற்றாகிய டிராக்கோமாவை இந்தியா வெற்றிகரமாக ஒழித்துவிட்டது என்று உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்துள்ளது.




- ✓ செவ்வாயன்று உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய இயக்குநர் சைமா வாஸேட் பகிர்ந்துள்ள மேற்கோளில், தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்த பொது சுகாதார மைல்கல்லை எட்டிய மூன்றாவது நாடு இந்தியா என்று ஐ.நா.சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

**➢ இந்தியாவின் ஐந்தாவது சந்திர பயணம் 'லூபெக்ஸ்'**

- ✓ ஆகஸ்ட் 2023இல் சந்திரயான்-3 வெற்றியடைந்த பிறகு, இந்திய தேசிய விண்வெளி ஆணையம், சந்திர துருவ ஆய்வுப் பணி (Lunar Polar Exploration Mission -Lupex) எனப்படும் புதிய சந்திர பயணத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ இந்தப் பணியானது இந்திய விண்வெளி நிறுவனமான இஸ்ரோ மற்றும் ஜப்பானின் விண்வெளி நிறுவனமான ஜக்சா (JAXA) ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மை ஆகும். மேலும், இது சந்திரனின் வளங்களை, குறிப்பாக நிலவின் தென் துருவத்தில் உள்ள தண்ணீரை ஆராய்வதில் கவனம் செலுத்தும்.

## ➢ இந்தியாவின் இரண்டாவது பெரிய பட்டாம்பூச்சி பன்முகத் தன்மை மையமாக காசிரங்கா அறிவிக்கப்பட்டுள்ளது

- ✓ ஆஸ்ஸாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா அதன் சின்னமான ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்திற்குப் பெயர் பெற்றது. இப்போது இந்தியாவின் இரண்டாவது பெரிய பட்டாம்பூச்சி பன்முதக்தன்மை மையமாக அங்கீகாரம் பெற்றுள்ளது.




- ✓ அருணாசலப் பிரதேசத்தில் உள்ள நம்தாபா தேசியப் பூங்காவைத் தொடர்ந்து, காசிரங்காவில் 446 வண்ணத்துப்பூச்சி இனங்கள் உள்ளன.
- ✓ இந்தப் புதிய மாற்றம் பூங்காவின் வளமான பல்லுயிர் பெருக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

## ➢ சூறாவளிப்புயல் டானா (Dana)

- ✓ டானா புயல் ஒடிசாவில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. டானா புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள ஒடிசா தயாராக இருந்தது.




- ✓ இதுஒடிசா கடற்கரையைத் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிப்புயல் கிழக்கு மத்திய வங்கக் கடலில் உருவாகும்.

- ✓ இந்தப் புயலானது ஒடிசா மற்றும் மேற்கு வங்கக் கடலோரப் பகுதிகளில் மணிக்கு 100 முதல் 120 கிமீ வேகத்தில் காற்றாக வீசும்.
- ✓ சூறாவளி சுழற்சியானது அந்தமான் கடலில் உருவாகி வடமேற்கு திசையில் நகர்ந்து, கிழக்கு மத்திய வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக உருவாக வாய்ப்பு இருந்தது.

### ➢ ஐஐடி சென்னை, 2025ஆம் ஆண்டுக்குள் துபாயில் சர்வதேச ஆராய்ச்சி மையத்தைத் தொடங்க உள்ளது




- ✓ இந்திய தொழில்நுட்பக்கழகம், சென்னையானது ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, துபாயில் தனது தொடக்க சர்வதேச முதன்மை மையத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- ✓ 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திறக்கப்படும் இந்த முயற்சியானது, இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையில் ஒத்துழைப்பு மற்றும் அறிவு பரிமாற்றத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ➢ ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய் (Anguiculus dicaprioi)

- ✓ மேற்கு இமயமலையில் புதிய பாம்பு இனம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் இதற்கு ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய் என்று பெயரிட்டுள்ளனர்.



- ✓ நடிகரும் சுற்றுச் சூழல் ஆர்வலருமான லியோனார்டோ டிகாப்ரியோவின் வனவிலங்கு பாதுகாப்பு முயற்சிகளைக் கௌரவிக்கும்பொருட்டு, இந்த இனத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது.

- ✓ இந்த ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய், கொலுபிரிடே (Colubridae) குடும்பத்தைச் சேர்ந்தது. இது மிகப்பெரிய பாம்புக் குடும்பமாகும். இதில் 304 பேரினங்கள் மற்றும் 1938 சிற்றினங்கள் உள்ளன. ஊலக அளவில் வாழும் பாம்பு இனங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு கொலுப்ரிடே ஆகும்.

APOLLO STUDY CENTRE

# விளையாட்டு

- **முதன்முறையாக கோ கோ உலகக் கோப்பை 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடத்தப்படும்**
- ✓ உலகின் முதல் முறையாக கோகோ உலகக் கோப்பைப் போட்டிகள் 2025 இல் இந்தியாவில் நடத்தப்படும்.




- ✓ இந்திய கோகோ கூட்டமைப்பு மற்றும் சர்வதேச கோகோ கூட்டமைப்பு ஆகியவற்றால், 2025ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல் கோகோ போட்டிகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ 6 கண்டங்களில் இருந்து 24 நாடுகள் பங்கேற்கும் இந்த நிகழ்வில் 16 ஆண்கள் மற்றும் பல பெண்களின் அணிகள் பங்கேற்கும்.

- **எஸ்ஏஎப்எப் யு-17 (SAFF U-17) சாம்பியன்ஷிப் போட்டிகள் 2024ஐ இந்தியா வென்றது**
- ✓ இது வரை தோல்வியையே சந்திக்காத இந்திய கால்பந்து அணியானது, 2024 ஆண்களுக்கான எஸ்ஏஎப்எப் யு-17 சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில், வங்கதேசத்தை 2க்கு 0 என்ற கணக்கில் தோற்கடித்தது.




- ✓ இறுதிப் போட்டியானது பூடானின் திம்புவில் உள்ள சங்லிதாங் மைதானத்தில் நடைபெற்றது.

- ப்ளூ கோல்ட்ஸ் என்று அழைக்கப்படும் இந்திய சிறுவர்கள் கால்பந்து அணி, போட்டி முழவதும் தோல்வியே அடையாமல் இருந்தது.

- **ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்**
- ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய மகளிர் அணி வெண்கலப் பதக்கம் வென்று வரலாறு படைத்தது.



- அரையிறுதியில் இந்தியா 1-3 என்ற கோல் கணக்கில் ஜப்பானிடமும், மற்றொரு அரையிறுதியில் சீனா 3-0 என்ற கணக்கில் ஹாங்காங்கிடமும் தோல்வியடைந்தன. அரையிறுதியில் அய்ஹிகா முகர்ஜி 2-3 என்ற கணக்கில் மிவா ஹரிமோட்டோவிடம் தோல்வியடைந்தார்.
- இருப்பினும் மனிகா பத்ரா, சட்சுகி ஓடொவை 3-0 என்ற கணக்கில் வென்றதன்மூலம் இந்தியாவை மீண்டும் சமநிலைக்குக் கொண்டு வந்தார்.
- கால் இறுதியில் இந்தியா, தென் கொரியாவை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பதக்கத்தை உறுதி செய்தது.

- **38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்**
- 2025 ஜனவரி 28 முதல் பிப்ரவரி 14 வரை நடைபெற உள்ள 38வது கோடைக்கால தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு, இந்திய ஒலிம்பிக் சங்கம் உத்தரகாண்ட மாநிலத்தைத் தேர்வு செய்துள்ளது.




- இந்த அறிவிப்பு மாநிலத்தின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது. ஏனெனில் இந்த மாநிலம் முதல் தடவையாக இந்த மதிப்புமிக்க நிகழ்வை நடத்துகிறது. ஆதைத்

தொடர்ந்து குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இது ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கிற்கு வெளியே முதல் முறையாக நடைபெற உள்ளது.

➢ **முதலமைச்சர் கோப்பை பிரச்சாரம் 2024**

✓ சேன்னை 105 தங்கம், 80 வெள்ளி, 69 வெண்கலம் ஆகிய பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளது.




✓ செங்கல்பட்டு, 31 தங்கம், 26 வெள்ளி மற்றும் 36 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

✓ கோயம்புத்தூர் 23 தங்கம், 40 வெள்ளி, 39 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

✓ சேலம் மாவட்டம் 2023இல் 19வது இடத்திலிருந்தது, 21 தங்கம், 12 வெள்ளி மற்றும் 23 வெண்கலம் ஆகிய பதக்கங்களை வென்று நான்காவது இடத்திற்கு முன்னேறியதால், இந்தப் பதக்கப் பட்டியலில் மிகவும் முன்னேறிய மாவட்டமாக சேலம் விளங்குகிறது.


✓ 2024 முதலமைச்சர் கோப்பை என்பது மாநிலத்தின் மிகப்பெரிய அடிமட்ட முயற்சிகளில் ஒன்றாகும். இதில் 38 மாவட்டங்களில் இருந்தும் 33,000 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

✓ புதக்கப் பட்டியலில் அனைத்து மாவட்டங்களும் இடம் பெற்றதும், பதக்கப்பட்டியலில் நீலகிரி மாவட்டம் கடைசி இடத்தைப்பிடித்ததும் இதுவே முதல் முறை ஆகும்.

# நினைவில் நின்றவர்கள்


**டாடா சன்ஸ் தலைவர் ரத்தன் டாடா 86 வயதில் காலமானார்**

- ✓ டாடா சன்ஸ் தலைவர் ரத்தன் டாடா, 9 அக்டோபர் 2024 அன்று தனது 86வது வயதில் மும்பையில் உள்ள ப்ரீச் கேண்டி மருத்துவமனையில் வயது முதிர்வு தொடர்பான நோய் காரணமாக காலமானார்.




- ✓ டாடாவின் தலைமையும் தொலைநோக்குப் பார்வையும் இந்தியாவின் வணிகம் மற்றும் பரோபகார நிலப்பரப்பில் அழியாத முத்திரையைப் பதித்ததால், அவரது மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.
- ✓ டாடா குழுமம், இந்தியப் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய வணிகம் ஆகியவற்றிற்கான அவரது பங்களிப்புகள் எல்லா காலத்திலும் மிகப்பெரிய தொழிலதிபர்களில் ஒருவராக அவரது பாரம்பரியத்தை உறுதிப்படுத்தியுள்ளன.

- ➢ **நீதியரசர் கே.எஸ். புட்டசாமி**
- ✓ தனியுரிமை தொடர்பான வழக்கில் முக்கிய மனுதாரரான நீதியரசர் கே.எஸ். புட்டசாமி, தனது 98வது வயதில் திங்கட்கிழமை அன்று காலமானார்.




- ✓ தனியுரிமை ஒரு அடிப்படை உரிமை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மறைந்துள்ளார்.
- ✓ இந்திய சட்ட வரலாற்றில் அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகள், குறிப்பாக தனியுரிமைக்கான உரிமை தொடர்பாக, இந்தியாவில் தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு மூலக்கல்லாக நினைவு கூறப்படும்.

# அறிக்கை

➢ **என்விஸ்டாட்ஸ் இந்தியா (EnviStats India) -2024**

✓ சமீபத்தில் வெளியிடப்பட்ட என்விஸ்டாட் இந்தியா 2024 அறிக்கையின்படி, நாகார்ஜுனா சாகர் - ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம், 360 சிறுத்தைகளைக் கொண்டு, இந்தியாவில் உள்ள 55 புலிகள் காப்பகங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.




✓ நாகார்ஜுன்சாகர் - ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம் ஆந்திரப் பிரதேசத்தின் நல்லமலா மலைத்தொடர்களில் (கிழக்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி) அமைந்துள்ளது.

✓ இது 5937 ச.கி.மீ பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் நாட்டின் மிகப்பெரிய புலிகள் காப்பகமாகும்.

✓ .இது கிழக்கு தொடர்ச்சி மலையில் அதிக எண்ணிக்கையிலான புலிகளைக் கொண்டுள்ளது.

➢ **சுற்றுச் சூழல் கப்பல் குறியீட்டுத் தளம் (Environmental Ship Index Platform)**

✓ சுற்றுச் சூழல் கப்பல் குறியீட்டுத் தளத்தில் பட்டியலிடப்பட்ட இந்தியாவின் முதல் துறைமுகமாக மோர்முகாவ் ஆனது.




✓ சுற்றுச் சூழல் கப்பல் குறியீட்டு போர்ட்டலில் ஊக்கத் தொகை வழங்குநராக பட்டியலிடப்பட்ட இந்தியாவின் முதல் துறைமுகமாக மோர்முகாவ் துறைமுக ஆணையம் மாறியுள்ளது.

- ✓ பசுமைக் கப்பல் போக்குவரத்தை ஊக்குவிக்கும் மோர்முகாவ் துறைமுகத்தின் முயற்சி சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. மோர்முகாவ் துறைமுகம் சுற்றுச் சூழல் கப்பல் குறியீடு மூலம் பசுமைக் கப்பல் ஊக்கத் தொகையை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் துறைமுகமாகும்.

APOLLO STUDY CENTRE

# தரவரிசைப் பட்டியல்

➢ **முதலாவது உலகளாவிய இயற்கைப் பாதுகாப்புக் குறியீடு (First Global Nature Conservation Index) 2024**

✓ 100க்கு 45.5 மதிப்பெண்களுடன், 2024ஆம் ஆண்டின் முதல் உலகளாவிய இயற்கைப் பாதுகாப்புக் குறியீட்டில் இந்தியா 176வது இடத்தில் உள்ளது.




✓ இது, கிரிபாட்டி, துருக்கி, ஈராக் மற்றும் மைரோனேஷியா ஆகிய நாடுகளுடன் உலக அளவில் ஐந்து மோசமான செயல்திறன் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவைச் சேர்க்கிறது.

✓ சிறிய ஐரோப்பிய நாடான லக்சம்பர்க் முதல் தரவரிசை நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

➢ **சட்ட விதி அட்டவணை, 2024**

✓ அக்டோபர் 23 அன்று வாஷிங்டன் டி.சி-யைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான உலக நீதித் திட்டம் வெளியிட்ட சட்ட விதி அட்டவணை, 2024இல் இந்தியா 142 நாடுகளில் 79வது இடத்தைப் பிடித்தது. உலக அளவில், டென்மார்க், நார்வே, பின்லாந்து சுவீடன் மற்றும் ஜெர்மனி ஆகியவை முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன.




✓ சட்ட விதி குறியீடானது, நாடுகளை எட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது. அவை: அரசு அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடுகள், ஊழல் இல்லாமை, திறந்தநிலை அரசாங்கம், அடிப்படை உரிமைகள், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு, ஒழுங்குமுறை அமலாக்கம், சிவில் நீதி மற்றும் குற்றவியல் நீதி ஆகும்.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| **அக்டோபர் 1** | **சர்வதேச முதியோர் தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'கண்ணியத்துடன் முதுமை" என்பதாகும். |
| **அக்டோபர் 1** | **சர்வதேச காபி தினம்** | மையக்கருத்து, 'காபி, உங்கள் தினசரி சடங்கு, நமது பகிரப்பட்ட பயணம்" |
| **அக்டோபர் 1** | **உலக சைவ தினம்** | 2024ஆம் ஆண்டின் உலக சைவ உணவு தினத்திற்கான மையக் கருத்து, 'மிக்ஸ் இட் அப்' ஆகும். |
| **அக்டோபர் 2** | **காந்தி ஜெயந்தி** | இந்த ஆண்டு மகாத்மா காந்தியின் 155வது பிறந்த நாள்<br>மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி சர்வதேச அகிம்சை தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **அக்டோபர் 2** | **சர்வதேச அகிம்சை தினம்** | மையக்கருத்து, 'அமைதி, சகிப்புத் தன்மை, புரிதல், மற்றும் அகிம்சை கலாச்சாரத்தை பாதுகாப்பதாகும்' |
| **அக்டோபர் 4** | **உலக விலங்குகள் தினம்** | உலக விலங்குகள் தினம் என்பது விலங்கு உரிமைகள் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியமான பிரச்சினைகளை விளக்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவிய கொண்டாட்டமாக உள்ளது. |
| **அக்டோபர் 5** | **உலக ஆசிரியர் தினம்** | மையக் கருத்து, 'ஆசிரியர் குரல்களுக்கு மதிப்பளித்தல்: கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை நோக்கி' |
| **அக்டோபர் 6** | **உலக பெருமூளைவாத தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், **'#UniquelyCP'** பெருமூளை வாதம் சமூகத்தின் தனித்துவத்தைக் கொண்டாடுகிறது – அவர்களின் ஆர்வங்கள், விருப்பங்கள் மற்றும் அடையாளங்கள் - அவர்கள் இயலாமையால் மட்டுமே வரையறுக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. |
| **அக்டோபர் 07** | **நீலகிரி தார் தினம்** | இ.ஆர்.சி தேவிதாரைக் கௌரவிக்கும் வகையில் அக்டோபர் 7ஆம் தேதியை நீலகிரி |

| | | |
|---|---|---|
| | | தார் தினமாக அரசு தேர்வு செய்தது. அவர் 1960களில் தென்னிந்தியாவின் ஒரே மலை உடுக்கைப் பற்றிய ஆய்வுகளை முன்னோடியாகக் கொண்ட ஒரு வனவிலங்கு பாதுகாப்பாளர் ஆவார். |
| **அக்டோபர் 07** | **உலக பருத்தி தினம்** | 2024ஆம் ஆண்டு உலக பருத்தி தினத்தின் அதிகாரபூாவ மையக் கருத்து, ‘நன்மைக்கான பருத்தி’ என்பதாகும். |
| **அக்டோபர் 08** | **இந்திய விமானப்படை தினம்** | தேர்ந்தெடுக்கப்பட்ட மையக்கருத்து, ‘பாரதிய வாயு சேனா: சக்ஷம், சக்ஷத், ஆத்மநிர்பார்’ (உள்ளார்ந்த, சக்தி மிகுந்த மற்றும் தன்னம்பிக்கை என மொழிபெயர்க்கப்படுகிறது). இது எதிர்காலத்திற்கான இந்திய விமானப்படையின் பார்வையை உள்ளடக்கியுள்ளது. |
| **அக்டோபர் 09** | **உலக அஞ்சல் தினம்** | 150 ஆண்டுகள் தகவல் தொடர்பு மற்றும் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளித்தல்’ என்பது இந்த ஆண்டு உலக அஞ்சல் தினத்தின் கருப்பொருளாகும். |
| **அக்டோபர் 10** | **தேசிய அஞ்சல் தினம்** | ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 10 ஆம் தேதி, இந்தியா தேசிய அஞ்சல் தினத்தைக் கொண்டாடுகிறது. இது இந்திய அஞ்சல் சேவையின் தொடக்கத்தைக் குறிக்கும் குறிப்பிடத்தக்க அனுசரிப்பு ஆகும். |
| **அக்டோபர் 10** | **உலக மனநல தினம்** | 2024 உலக மனநல தினத்தின் கருப்பொருள், ’பணியில் மனநலம்’ என்பதாகும். |
| **அக்டோபர் 11** | **சர்வதேச பெண் குழந்தை தினம்** | 2024 மையக்கருத்து – எதிர்காலத்திற்கான பெண்களின் பார்வை |
| **அக்டோபர் 12** | **உலக இடம்பெயர் பறவைகள் தினம்** | 2024இன் கருப்பொருள், ‘பறவைகளுக்கான பூச்சிகள்’. இடம்பெயரும் பறவைகளுக்கு பூச்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. வேகமாகக் குறைந்து வரும் பூச்சிகளின் |

| | | |
|---|---|---|
| | | எண்ணிக்கையைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கிறது. |
| **அக்டோபர் 15** | **உலக மாணவர் தினம்** | ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15ஆம் தேதி, தொலைநோக்குத் தலைவர், கல்வியாளர் மற்றும் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜெ அப்துல் கலாமின் வாழ்க்கை மற்றும் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் உலக மாணவர் தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **அக்டோபர் 15** | **கிராமப்புற பெண்களுக்கான சர்வதேச தினம்** | 2024ஆம் ஆண்டில், இந்த குறிப்பிடத்தக்க நாளின் கருப்பொருள், 'கிராமப்புற பெண்கள் நமது கூட்டு எதிர்காலத்திற்காக இயற்கையை நிலை நிறுத்துதல்' என்பதாகும். |
| **அக்டோபர் 15** | **உலக கை கழுவும் தினம்** | மையக் கருத்து 2024 – சுத்தமான கைகள் ஏன் இன்னும் முக்கியம் என்பது. |
| **அக்டோபர் 16** | **உலக உணவு தினம்** | 'சிறந்த வாழ்க்கை மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான உணவுகளுக்கான உரிமை' என்ற கருப்பொருளின்கீழ் இந்த ஆண்டு உலக உணவு தினம் கடைபிடிக்கப்படுகிறது. |
| **அக்டோபர் 16** | **உலக மயக்க மருந்து தினம்** | 2024ஆம் ஆண்டு உலக மயக்க மருந்து தினத்தின் கருப்பொருள், 'தொழிலாளர் நலம்' என்பதாகும். |
| **அக்டோபர் 17** | **வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினம்** | 2024ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு சர்வதேச தினத்தின் கருப்பொருள், 'சமூக மற்றும் நிறுவன துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், நீதியான, அமைதியான மற்றும் உள்ளடக்கிய சமூகங்களுக்காக இணைந்து செயல்படுதல்' என்பதாகும். |
| **அக்டோபர் 20** | **உலக புள்ளியியல் தினம்** | 'முடிவெடுப்பதற்கான தரவுகளின் பயன்பாடு' என்பதே மையக் கருத்தாகும். |
| **அக்டோபர் 20** | **உலக** | 2024ஆம் ஆண்டு உலக |

| | | |
|---|---|---|
| | **ஆஸ்டியோபோரோசிஸ் தினம்** | ஆஸ்டியோபோரோசிஸ் தினத்தின் கருப்பொருள், 'உடையக் கூடிய எலும்புகள் வேண்டாம்' என்பதாகும். |
| **அக்டோபர் 21** | **உலக அயோடின் குறைபாடு தினம்** | 2024ஆம் ஆண்டு உலக அயோடின் குறைபாடு தினத்தின் கருப்பொருள், 'விழிப்புணர்வு எழுச்சி' என்பதாகும். |
| **அக்டோபர் 22** | **சர்வதேச திணறல் விழிப்புணர்வு தினம்** | மையக் கருத்து 2024 – கேட்கும் சக்தி – திணறுபவர்களிடம் உலகைக் கேட்க வைக்கும் தனித்துவமான வாய்ப்பு உள்ளது' |
| **அக்டோபர் 24** | **உலக போலியோ தினம்** | 2024ஆம் ஆண்டு உலக போலியோ தினத்தின் கருப்பொருள், 'ஒவ்வொரு குழந்தையையும் சென்றடைவதற்கான ஒரு உலகளாவிய பணி' என்பதாகும். |
| **அக்டோபர் 24** | **ஐக்கிய நாடுகள் தினம்** | 2024ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் தினத்திற்கான கருப்பொருள், 'உலகளாவிய ஒற்றுமை மற்றும் நிலையான வளர்ச்சி' என்பதாகும். |
| **அக்டோபர் 28** | **சர்வதேச அனிமேஷன் தினம்** | இது அக்டோபர் 28, 1892 அன்று பாரிசில் உள்ள எமைல் ரெய்னாட்டின் தியேட்ரே ஆப்டிக் என்ற அனிமேஷன் படங்களின் முதல் பொதுத் திட்டத்தை நினைவுகூருகிறது. |
| **அக்டோபர் 29** | **உலக பக்கவாத தினம்** | மையக் கருத்து, #GreaterThanStroke |
| **அக்டோபர் 29** | **ஆயுர்வேத தினம்** | இந்த ஆண்டுக்கான கருப்பொருள் உலகளாவிய சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆயுர்வேதத்தின் திறனை எடுத்துக்காட்டுகிறது. |
| **அக்டோபர் 29** | **சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம்** | மையக் கருத்து 2024 – பராமரிப்பு அமைப்புகளை மாற்றுதல்: பெய்ஜிங் +30 சூழலில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைதல் |
| **அக்டோபர் 31** | **உலக சேமிப்பு தினம்** | உலக சேமிப்பு தினம், சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய |

| | | |
|---|---|---|
| | | விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது. |
| **அக்டோபர் 31** | **தேசிய ஒற்றுமை தினம்** | ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் அல்லது தேசிய ஒற்றுமை தினம் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது. |
| **அக்டோபர் 31** | **உலக நகரங்கள் தினம்** | 2024ஆம் ஆண்டின் கருப்பொருள், "இளைஞர்கள் முன்னிலை வகிக்கும் காலநிலை மற்றும் நகரங்களுக்கான உள்ளூர் நடவடிக்கை' என்பதாகும். |

APOLLO STUDY CENTRE